**17.06.2026.**
**O.S.No.100/2014**
**பி.வா.சா.2 : தவமணி**
**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) குமார சண்முகம் என் தூரத்து உறவினர். வாதி எனக்கு மாமன், மைத்துனர் முறை. பிரதிவாதிகள் எனக்கு பங்காளி முறை. குமார சண்முகம் தான் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார். 1999 ம் ஆண்டு சொத்துக்களை பாகம் பிரிவினை செய்து கொண்டது தெரியும். எந்த எந்த சொத்து எந்த சர்வே எண் என்று தெரியாது. பாக பிரிவினை பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. பாக பிரிவினை பேசி விட்டேன். 1.60 ஏக்கர் நிலமும் ஊரில் உள்ள நத்தம் வீடும் வெங்கடேசனுக்கு பிரித்து விடப்பட்டது. சாந்தி என்பவருக்கு 2.36 ஏக்கர் நிலம் பிரித்து விடப்பட்டது. எனக்கு படிக்க தெரியாது. வெங்கடேசனுக்கு 3 மனைவிகள் உள்ளனர். அவருடைய அப்பாவின் சம்மதத்துடனும் தான் 3 திருமணமும் செய்து கொண்டார். மருதை கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்து தான். மொத்து சொத்துககளிலும் வெங்கடேசன் மற்றும் சாந்தி க்கு பாகம் உள்ளது என்றும் நான் சொல்லும் பாக பிரிவினையில் எப்போதும் கலந்துகொள்ளவில்லை என்றும் அது பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு 1.60 ஏக்கர் மீது தான் போடப்பட்டுள்ளது.

2) வாதி கோரியுள்ள படி வாதிக்கு தாவா சொத்தில் பாதி பாகம் கிடைக்கத்தக்கது என்றும் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஏற்கனவே பாகமாகி விட்டது என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2026.06.17 17:40:03 +0530

**Subordinate Judge, Attur.**